1993 ஏப்ரல் 23]

(ஆ) ஓர் உறுப்பினர் பேசியதை இன்னோர் உறுப்பினர் பேசியதாக ஒரு பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

*திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பற்றி, அவர்களுடைய வெற்றிக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் காரணம், அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய செல்வாக்கில் வெற்றி பெற்று விட்டு சட்டமன்றத்திற்கு வராமல் இருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்களை அவர்களுடைய தொகுதியிலே கொண்டு விடுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று ஒரு வேண்டுகோளை நான் வைத்து இருந்தேன். இன்றைக்கு தினத்தந்தி பத்திரிகையிலே திரு. வி. கே. சின்னசாமி அவர்கள் கூறியதாக அந்தச் செய்தி வந்திருக்கிறது. (சிரிப்பு) ஒருவேளை என்னுடைய வேண்டுகோளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்று அதைச் செய்திருந்தால் அந்தப் புகழ் திரு. வி. கே. சின்னசாமி அவர்களுக்குப் போய் விடுமே என்பதை நான் வேதனையோடு குறிப்பிட்டு, இதுபோன்று இனி மேலும் பத்திரிகைகள் ஆள் மாறாட்டம் செய்யக்கூடாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேறு ஒன்றும் இல்லை. திரு. வி. கே. சின்னசாமியும் இருக்கிறார். திரு. ம. சின்னசாமியும் இருக்கிறீர்கள். திரு. வி. கே. சின்னசாமி அடிக்கடி எழுந்து நின்று கொண்டே இருக்கிற காரணத்தாலே அவர் கண்ணிலே பட்டிருப்பார். எனவே, அது தவறுதான். அதைத் திருத்திக்கொள்வார்கள்.

முற்பகல் 11–30

*திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாருக்கு புகழ் வந்தாலும் அது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் காலடிக்குத்தான் போய்ச் சேரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

3. கவன ஈர்ப்பு

(அ) ஆரணியிலிருந்து பெங்களூருக்கு இயங்கிக் கொண்டிருந்த பட்டுக்கோட்டை அழகிரி பேருந்து நிறுத்தப்பட்டதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம்

வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஆரணி நகரிலிருந்து பெங்களூருக்குச் சென்று கொண்டிருந்த பட்டுக்கோட்டை அழகிரி பஸ்கள் நிறுத்தப்பட்டுள்ளதால் வியாபாரிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

14—11—1992-லிருந்து 9—3—1993 வரை இருமுனை வரி விதிப்பின் அடிப்படையில் ஆரணி பெங்களூர் தடத்தில் ஒரு பேருந்து பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டது. 10—3—1993-க்கு பிறகு ஆரணி முதல் பெங்களூர் வரை பேருந்து இயக்குவதற்கான உரிமத்தில் கர்நாடக அரசின் ''மாநில போக்குவரத்து ஆணையரின்'' மேல்ஒப்பம் பெற முடியாத நிலையில் மேற்படி பேருந்து தொடர்ந்து இயக்க முடியவில்லை. இது அண்டை மாநில தட ஒப்பந்தத்தில் இல்லாத ஒன்று. தற்போது பகுதி பகுதியாக பேருந்து வசதி அத்தடத்தில் உள்ளது. முக்கியமாக வேலூர்-பெங்களூர் தடத்தில் போதுமான அளவு பேருந்து வசதி உள்ளது.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் பார்த்தேன். இருமுனை வரி விதிப்பின் அடிப்படையில் ஆரணி-பெங்களூர்-க்கு விடப்பட்டிருந்த பேருந்து 10—3—1993-க்குப் பிறகு ஆரணி முதல் பெங்களூர் வரை இயக்குவதற்கான உரிமத்தில் கர்நாடக அரசினுடைய மேலொப்பம பெற முடியாத நிலையில் அந்தப் பேருந்தை இயக்க முடியவில்லை என்று கூறியிருக்கிறார்கள். மீண்டும் நிறுத்தப்பட்டுள்ள அந்தப் பேருந்தை இயக்க கர்நாடக அரசினுடைய மேலொப்பம் பெற வழிவகை உள்ளதா எனவும் அப்படி உண்டு என்றால் விரைவில் அதைப் பெற்று அந்த பஸ்ஸை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் அந்தப் பேருந்தை அங்கேயிருந்து இயக்கினோம். 14—11—1992

லேயிருந்து 9—3—1993 வரை இருமுனை வரிகள் கட்டி அந்தப் பேருந்தை இயக்கினோம். அதற்குப் பிறகு கர்நாடக மாநிலத்தோடு நாம் தொடர்பு கொண்டு அதை ஒருமுனை வரியாக மாற்றி இரு மாநிலங்களுக்கும் இருக்கின்ற ஒப்பந்தத்தை நாம் புதுப்பிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்கின்ற நேரத்தில் அப்போது ஆட்சி மாற்றத்தின் காரணமாக, இரு மாநிலங்களுக்கும் ஏற்படுகிற ஒப்பந்தத்தில் ஒரு தேதியை நிர்ணயித்துவிட்டு அந்த மாநிலப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே வருகை தரவில்லை. மீண்டும் அதை விரைந்து செயல்படுத்துவதற்கு, அந்தப் போக்குவரத்துத் துறை அமைச்சரோடு பேசி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணியிலேயிருந்து சென்னை என்று பார்க்கிறபோது 140 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. ஆரணியிலேயிருந்து பெங்களூர் என்று பார்க்கிறபோது 180 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. ஆனால், ஆரணியைப் பொறுத்தமட்டிலும் ஆரணியிலே தொழில் புரியக் கூடிய வியாபாரிகள், பெரும்பான்மையானவர்கள் தங்களுடைய தொழில் காரணமாக பெங்களூர்தான் செல்லுகிறார்கள். அப்படிச் செல்லுகிறவர்களுக்கு வசதியாக ஏற்கெனவே விடப்பட்டிருந்த பஸ் இரவிலே புறப்பட்டு காலையிலே அங்கே செல்லும். மறுபடியும் அடுத்த நாள் இரவிலே புறப்பட்டு காலையிலே இங்கே வரும். அங்கே செல்பவர்களுக்கு தங்களுடைய வியாபாரத்திற்காக, தொழில் வசதிக்காக இது மிகவும் வசதியாக இருந்தது. ஆனால், இப்போது அந்த பஸ் நிறுத்தப்பட்டுவிட்டது. இங்கே விவர அறிக்கையிலே, பகுதி, பகுதியான வழித்தடத்திலே பேருந்துகள் உள்ளன என்றும், வேலூரிலேயிருந்து பெங்களூர் தடத்தில் போதுமான அளவுக்குப் பேருந்துகள் செல்கின்றன என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். பகுதி பகுதியாக என்று செல்லுகிறபோது அதிலே நடைமுறையிலே சிக்கல்கள் அதிகம் இருக்கிறது. ஆரணியிலேயிருந்து ஒரு பயணி வேலூருக்குச் சென்று, நான் பெங்களூருக்குச் செல்ல வேண்டும் என்று பஸ்ஸிலே ஏறுகிறபோது, இறங்குயா, பஸ் ஃபுல்லாகிவிட்டது ; டிக்கெட் இல்லை என்று சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல. அவர்கள் கொண்டு செல்லுகிற லக்கேஜ் எல்லாம், பகுதி பகுதியாகச் செல்கிறபோது, இறக்கி ஏற்றி, இறக்கி ஏற்றிக் கொண்டு செல்லக்கூடிய சிரமம் அவர்களுக்கு ஏற்படுகிறது. குறிப்பாக, பகுதி பகுதியாகச் செல்கிறபோது பெண்களும் குழந்தைகளும் செல்லுகிறபோது, குழந்தைகளையும் பெண்களையும் இறக்கி, மீண்டும் பஸ்ஸிலே ஏற்றுகிற சிரமம் இருக்கிறது. அதுமட்டுமல்ல, இப்படி பகுதி பகுதியாகச் செல்லுகிறபோது இருக்கிற சிரமங்களுக்காக நான் ஒன்றை இங்கே சொல்ல விரும்புகிறேன். அந்த பஸ் ஆரணியிலேயிருந்து பெங்களூருக்குச் செல்கிறது. நம்முடைய மாநிலத்தை விட்டு இன்னொரு மாநிலத்திற்குச் செல்லுகிறது.

[டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்] [1993 ஏப்ரல் 23

இன்றைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து, எங்களையெல்லாம் இன்றைக்கு இந்த நிலையிலே அமர வைத்து அழகு பார்த்துக்கொண்டிருக்கிற எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய பெயராலே அந்தப் பஸ் ஆரணியிலேயிருந்து பெங்களூருக்குச் செல்வதற்காகவும், அதே நேரத்திலே மக்களிடத்திலே நான் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் இதற்கு முன்பாகவே சொன்னார்கள். நான் பொது மக்களிடத்திலே சொன்னபோது, பொது மக்கள் என்னிடத்திலே சொன்ன ஒன்றை நான் இங்கே சொல்கிறேன். அம்மாவிடத்திலே சொல்லுங்கள்; அம்மா நிச்சயமாக பஸ்ஸை விடுவார்கள் என்று, அவ்வளவு நம்பிக்கையோடு அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அவர்களுடைய நம்பிக்கை வீண் போகாமல், ஆரணியிலேயிருந்து பெங்களூருக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரைத் தாங்கிய பேருந்து ஒன்றை விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும் என்று சொல்லுவார்கள். ஆனால், கேளாமலேயே கொடுக்கக்கூடியவர்தான் நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). இதுவே நம்முடைய மாநிலமாக இருந்தால் நாளை காலையிலேயே இந்தப் பேருந்தை இயக்கி விடலாம் என்று சொல்லிவிட முடியும். இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேதான் காலதாமதம் ஏற்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரால் வருகிறபொழுது அந்தப் பேருந்துக்கள் அந்தக் காலக்கட்டத்தில் இயக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 11—35

(ஆ) சென்னை நகரத்தில் பஸ் பற்றாக்குறையால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. டி. எம். ரங்கராஜன், திரு. எஸ். ஜெயக்குமார் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு டி. எம். ரங்கராஜன்.